# குன்னூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்புகள்

6 பக்கத் தொடர்ச்சி

5 பெரும தண்ணீர் லாரிகள் (Water Bowzers) கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**85. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்கு மூச்சுக் கருவிகள் (Breathing Apparatus Sets) வழங்குதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளின் போது பயன்படுத்துவதற்காக 700 மூச்சுக் கருவிகள் (Breathing Apparatus Sets) ரூபாய் 10.50 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**86.தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டில் உள்ள மூச்சுக் கருவிகளுக்கு மறுநிரப்பம் செய்ய காற்றுப் பிடிக்கும் கருவிகள் வழங்குதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டில் உள்ள மூச்சுக் கருவிகளுக்கு மறுநிரப்பம் செய்ய 5 காற்றுப் பிடிக்கும் கருவிகள் (Breathing Apparatus Air Compressors) ரூபாய் 80 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**87.தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்கு நீட்டிச் சுருக்கும் இரப்பர் விசைப் படகுகள் வழங்குதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்கு 50 நீட்டிச் சுருக்கும் இரப்பர் விசைப் படகுகள் (Inflatable Rubber Boats with Out Board Motor) ரூபாய் 3.5 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**88.தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் பயன்பாட்டிற்கு கூட்டு மீட்புக் கருவிகள் (Combi-tools) வழங்குதல்**

அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்கு கூட்டு மீட்புக் கருவிகள் வழங்கும் திட்டத்தின் முதல் கட்டமாக, 50 கூட்டு மீட்புக் கருவிகள் (Combi-tools) ரூபாய் 4.5 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**89.1தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கு மழையங்கிகள் (Rain Coats) வழங்குதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கு 2,500 மழையங்கிகள் (Rain Coats) ரூபாய் 50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**90. 8தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உதவி மாவட்ட அலுவலர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக புதிதாக ஈப்புகள் (Jeeps) வழங்குதல்**

> **“பொதுமக்கள் காவல் நிலையத்தை எளிதில் அணுகவும் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், திருநாவலூர் காவல் நிலையத்தில் இருந்து இப்பகுதி தொலைவில் இருப்பதாலும், வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதாலும் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும், போக்கிரிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்தில் உள்ள களமருதூரில் புதிதாக காவல் நிலையம் ரூபாய் 2.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.”**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உதவி மாவட்ட அலுவலர்களின் அலுவல் பணிகளுக்காக ஈப்புகள் (Jeeps) வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 10 ஈப்புகள் ரூபாய் 90 லட்சம் செலவில்உ கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**91. 8தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலைய அலுவலர்களின் பயன்பாட்டிற்காக புதிய விசைமிதி வண்டிகள் (Motor Cycles) வழங்குதல்**

அனைத்து நிலைய அலுவலர்களுக்கும் விசைமிதி வண்டிகள் (Motor Cycles) வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 50 விசைமிதி வண்டிகள் (Motor Cycles) ரூபாய் 80 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**IV தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி-கள் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள்/ சுற்றுச்சுவர் கட்டுதல்**

**92.திண்டிவனம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 5.58 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**93.காட்டுமன்னார்கோவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 6.68 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**94.கொடைக்கானல் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 3.13 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**95.குன்னூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

நீலகிரி மாவட்டம், குன்னூரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 4.90 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**96.ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 4.76 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**97.மதுரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் மற்றும் தென்மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

மதுரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் மற்றும் தென்மண்டல துணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு ரூபாய் 7.85 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

**98.திருச்சி மண்டல பயிற்சி மையம் நிறுவுவதற்கான நிலத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திருச்சி மண்டல பயிற்சி மையம் நிறு வுவதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்திற்கு சுற்றுச்சுவர் (Compound Wall) ரூபாய் 85 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**Vதீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்**

**99.9கோயம்புத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வளாகத்தில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்**

கோயம்புத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வளாகத்தில் ரூபாய் 27.22 கோடி செலவில் 72 பணியாளர் குடியிருப்புகள் இரண்டு கட்டங்களாகக் கட்டப்படும்.

**VI புதிய மண்டலம் உருவாக்குதல்**

**100. 9தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலத்தை இரண்டாகப் பிரித்து விழுப்புரத்தில் புதிய மண்டலம் உருவாக்குதல்**

| மண்டலம் | மாவட்டங்கள் |
|---|---|
| மத்திய மண்டலம் | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், அரியலூர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர். |
| விழுப்புரம் மண்டலம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை. |

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலத்தை இரண்டாகப் பிரித்து விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலம் பின்வரும் வகையில் ரூபாய் 1.04 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**VII பதக்கங்கள்**

**101. 9தீத்தொண்டு நாளில் வழங்கப்படும் சிறப்புப் பணி பதக்கம் மற்றும் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்படும் அண்ணா பதக்கம் ஆகியவற்றின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

தீத்தொண்டு நாளில் வழங்கப்படும் சிறப்புப் பணி பதக்கம் மற்றும் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்படும் அண்ணா பதக்கம் ஆகியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு உயர்த்தப்படும்

| பதக்கத்தின் பெயர் | தற்போது வழங்கப்படும் எண்ணிக்கை | உயர்த்தி வழங்கப்பட உள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்புப் பணி பதக்கம் (ஏப்ரல் 14) | 6 | 12 |
| அண்ணா பதக்கம் (செப்டம்பர் 15) | 10 | 20 |

**VIIIஅதிவிரைவு மீட்புப் படைக்கு பயிற்சி மற்றும் சிறப்பு உபகரணங்கள் வழங்குதல்**

**102.9தீயணைப்போர் கமாண்டோ படைகளுக்கு (Rapid Rescue Force அதிவிரைவு மீட்புப் படை) பயிற்சி மற்றும் சிறப்பு உபகரணங்கள் வழங்குதல்**

தலா 25 தீயணைப்போர்களைக் கொண்ட இரண்டு கமாண்டோ படைகளுக்கு (Rapid Rescue Force அதிவிரைவு மீட்புப் படை) பயிற்சி மற்றும் சிறப்பு உபகரணங்கள் ரூபாய் 1.00 கோடி செலவில் வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்.

---

### கலைஞர் சந்தித்த சவால்களை விட அதிக சவால்களைச் சந்திக்கும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாநில - தேசியப் பிரச்சினைகளுக்காகப் போராடுகிறார்!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேட்டில் – நீதியரசர் கே.சந்துரு சிறப்புக் கட்டுரை



**சென்னை, மே. 01-**

**தி.மு.க. கழகத் தலைவரும் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் சந்தித்த சவால்களை விட அதிக சவால்கள் சந்திக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில பிரச்சினைகளுக்காகவும் - தேசிய பிரச்சினைகளுக்காகவும் மிகவும் போராடி வருகிறார் என்று நீதியரசர் கே. சந்துரு ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேட்டில் எழுதிய சிறப்புக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

‘தந்தை முன்னெடுத்த மாநில சுயாட்சிக்கான போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்’ என்ற தலைப்பில் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’வில் (29.04.2025) நீதியரசர் கே. சந்துரு கட்டுரை எழுதியுள்ளார்.

அதன் முக்கிய பகுதி வருமாறு:



THE TIMES OF INDIA

INCLUSIVE OF CHENNAI TIMES (ONLY IN CHENNAI CITY)

INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER

**Stalin takes father's battle for state autonomy forward. Will it work?**

*In 1969, Karunanidhi Set Up A Committee To Look Into Centre-State Relations. But The Report Was Ignored. Fifty Years On, After Run-Ins With Union Govt, Stalin Forms A Panel To Do The Same. But It Too May Bring Little Change*

K Chandru

THE PANEL IS INDICATIVE OF THE TROUBLES AND UNFAIR TREATMENT THE STATE GOVT IS GOING THROUGH

*(The writer is a former judge of Madras high court)*

தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் வெளிநடப்பு செய்தது இந்தியாவின் கூட்டாட்சி அமைப்புகளின் பேசும்பொருளாகிவிட்டது.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் குழு அமைக்கப்பட்டு அது ஜனவரி 2025-ல் இடைக்கால அறிக்கை அளித்து இருக்கிறது. அது பல்வேறு கருத்துக்களால் விமர்சிக்கப்படுகிறது.

மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் என்கிற முழக்கம் அரசியல் வட்டாரங்களில் கடந்த 50 ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி 1967-ல் தி.மு.க. முதன் முதலாக ஆட்சியை பிடித்தபோது ஒன்றிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை அது உணர ஆரம்பித்தது. தி.மு.க. மட்டுமல்ல அப்போது காங்கிரஸ் தோற்ற 8 மாநிலங்களிலும் ஆட்சிக்கு வந்த கட்சிகள் உணர்ந்தன.

1969ஆம் ஆண்டு, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பி.வி. ராஜமன்னார் தலைமையில் மூவர் கொண்ட குழுவை மாநில சுயாட்சி மற்றும் ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தர முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைத்தார்.

அந்தக் குழு ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகள் மற்றும் கூட்டாட்சி அமைப்புகள் வலுவடைய மறுமலர்ச்சித் திட்டங்களான பரிந்துரை செய்தது. ஆளுநருக்கான அதிகாரங்கள் வரைமுறைகள், மாநில அரசுகளுக்கான கூடுதல் அதிகாரங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டிருந்தன.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து விரிவாக அறிக்கை தர அமைக்கப்பட்ட முதல் குழு என்பதால், ராஜமன்னார் அறிக்கை அப்பேது பரவலாக வரவேற்கப்பட்டது.

ஆனால் அப்போதிருந்த ஒன்றிய அரசுகள் அதை ஏற்கவில்லை. அப்போதைய வாஜ்பாய் அரசு, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வெங்கடாச்லையா தலையிடாமல் இது தொடர்பாக அமைக்கப்பட்டு, அதுவும் ஆளுநர் தொடர்பாக சில கருத்துக்களை தெரிவித்திருந்தது.

ராஜமன்னார் குழு அறிக்கை 1971-ல் வெளியானது. அப்போது தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டது. பின்னர் கூட்டணி முறிந்த நிலையில் கலைஞர் அரசு 1976 பிப்ரவரியில் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அரசமைப்புச் சட்டம் பிரிவு 356-ன் கீழ் தி.மு.க. அரசு பலரை பாதிக்கப்பட்டது. அதையடுத்து 356-வது பிரிவு தவறாகப் பயன்படுத்துவது. கூட்டாட்சி அமைப்புகளின் அடிப்படையில் மாநில அரசுகளின் எதிர்காலம் குறித்து விவாதம் தொடங்கியது.

முதலமைச்சராக கலைஞர் அவர்கள் 18 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தாலும் பெரும்பாலும் பல்வேறு போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது.

மு.க.ஸ்டாலின் அவர்களும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. 2021-ல் அவர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பலம் வாய்ந்த ஒன்றிய பா.ஜ.க. அரசை கடுமையாக எதிர்கொண்டு வருகிறார். அவரது தந்தையார் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளையும் இவரும் சந்திக்க நேரிடுகிறது.

அதுவுமின்றி, குடியுரிமை திருத்தச் சட்டம், வக்ப் திருத்தச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு அகில இந்தியப் பிரச்சினைகளையும் ஸ்டாலின் கையாண்டார். அதன் காரணமாக அவரது ஆட்சிக் காலத்தில் பல அமைச்சர்கள் அமலாக்கத் துறையின் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டவுடன் ஆளுநர் மாளிகைக்கும் தலைமைச் செயலாகத்துக்கும் இடையே பல்வேறு பிரச்சினைகளில் பதற்றம் நிலவத் தொடங்கின.

துவக்கத்தில் பேரவையில் உரையை முழுமையாக படிக்காமல்வெளிநடப்பில் ஈடுபட்டது. பல்கலைக் கழக வேந்தர் என்கிற முறையில் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் இழுத்தடித்ததோடு துணை வேந்தர்கள் நியமித்ததை தடுத்து நிறுத்தியது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் பஞ்சாப், கேரளா, தெலுங்கானா மாநில ஆளுநர்களின் வழியில் நடந்து கொண்டார் ஆர்.என்.ரவி.

ஆளுநர் ரவி அவரது நடைமுறையில் வலுவலாக இருந்ததால் கடைசியில் உச்சநீதிமன்றம் தலையிட்டு அரசியலமைப்புச் சட்ட வரலாற்றில் முதன் முறையாக தாமாக சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தந்தது.

வெள்ள நிவாரண நிதியை தாமதப் படுத்தியது, பிறகு குறைந்த அளவு வழங்கியது, வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்துக்கான நிதியை வழங்குவதில் தாமதம் உள்ளிட்ட பிரச்சினைகளை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளது.

அத்துடன் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையை எதிர்கொள்ள நீதிபதி முருகேசன் தலைமையில் மாநில கல்விக் கொள்கையை உருவாக்க ஸ்டாலின் அவர்கள் குழு அமைத்துள்ளார். மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை பொதுப் பட்டியலுக்கு சட்டத்துக்குப் புறம்பாக ஒன்றிய அரசு மாற்றியது குறித்தும் அக்குழு பரிசீலிக்க உள்ளது.

இது தொடர்பாக, கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றியது தொடர்பாக, ஸ்டாலின் தான் முதன் முதலாக குரல் கொடுத்துள்ளார்.

குடியுரிமை திருத்தச் சட்டம், வக்ப் சட்ட மசோதா, ஒரு தேசம் ஒரு தேர்தல் இவைகளை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நீட் தேர்வை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்ததால் தமிழ்நாட்டுக்கான சர்வ சிக்ஷ அபியான் திட்டத்துக்கான நிதி மறுக்கப்பட்டது.

அந்த வகையில் **தந்தை முன்னெடுத்த மாநில சுயாட்சிக்கான போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

**கலைஞர் சந்தித்த சவால்களை விட அதிகமான சவால்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து வருகிறார். இருந்த போதிலும் மாநில பிரச்சினைகளுக்காகவும், தேசிய பிரச்சினைளுக்காகவும் மிகத் தீவிரமாக போராடி வருகிறார். போர்க்களத்தில் கலைஞரை அர்ஜுனர் என்று ஒப்பீடு செய்தால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அபிமன்யுவாக குறிப்பிடலாம்.**

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து குழு அமைத்தது தான் இவ்வளவு பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதும் மாநில அரசை ஒன்றிய அரசு மிக மோசமாக நடத்துவதற்கு காரணம் என்பதும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

நிறைவாக, மாநில சுயாட்சி தேவைக்கான கோரிக்கைக்கு மருந்தாக அந்த குழுவின் அறிக்கையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதோடு, வரும் தேர்தலில் அதை ஒரு பிரச்சினையாகவும் ஆக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு அக்கட்டுரையில் நீதியரசர் கே. சந்துரு குறிப்பிட்டுள்ளார்.